# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2086/27 - 2018 අගෝස්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.30

*2086/27 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம் 92 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு உத்தேச கடுபோத - பமுனாகொடுவ - பண்டுவஸ்நுவர நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் ரபாவெவ கன மீற்றர் 2000 நிலக்கீழ் நீர்த்தேக்கம் மற்றும் 450 கள மீற்றர் ஆன நீர்த்தாங்கி கோபுரம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**ரவூப் ஹக்கீம்,**
*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2018, ஓகத்து 21.*
*5/2/3/1407.*

**அட்டவணை**

குருநாகல் மாவட்டத்தில், படுவஸ்நுவர - கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் கல்லெஹெபிடிய 1362 கிராம அலுவலர் பிரிவில் பாதமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள கோன்கஹமுல ஹேன அத்துடன் தன்கஹமுலஹேன என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 80 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தினை கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : கம்சபா வீதி ;
கிழக்கு : கம்சபா வீதி ;
தெற்கு : துண்டு இலக்கம் 2 எஞ்சியுள்ள காணி;
மேற்கு : துண்டு இலக்கம் 2 எஞ்சியுள்ள காணி.

காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :

விஜேசிங்ஹ ஆரச்சிகே சுனில் விஜேசிங்ஹ,
பாதமுல்ல - கனன்தேவெவ.

*9-356*


1A - G 28380 — 27 (2018/08)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம் 92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், ககுறித்த சபைக்கு குருநாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் தும்புரவேற்பாட்டு செயற்திட்டத்தின் கழிவு நீரமைப்பு குழாய் வழியை பதிப்பதற்காக காணிப் பகுதிகளின் வழியுரிமையை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதிகளை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**ரவூப் ஹக்கீம்,**
*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2018, ஓகத்து 21.*
*5/2/3/1408.*

**அட்டவணை**

*குருநாகல் மாவட்டத்தில், குருநாகலை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 837, குருநாகலை நகரம் - மேற்கு கிராம அலுவலர் பிரிவில் குருநாகல் நகரத்தில் நீர்கொழும்பு கிராமத்தில் அமைந்துள்ள ஹகுருகெடியாவ என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து 2.5 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள இரண்டு காணிப்பகுதிகள்.*

1. *துண்டு இலக்கம் 1 காணியின் பெயர் (இலக்கம் 1927 உடைய உத்தரவு பெற்ற நில அளவையாளரின் திட்டவரைவின் இலக்கம் 8 D இலிருந்து ஒரு பகுதி) காணி விஸ்தீரணம் 1.5 பேர்ச்சஸ் காணியின் எல்லைகள் :*

*வடக்கு : இலக்கம் 1927 உத்தரவு பெற்ற நில அளவையாளரின் திட்டவரைவின் துண்டு இலக்கம் 1 மற்றும் துண்டு இலக்கம் 8 A;*

*கிழக்கு : இலக்கம் 1927 உத்தரவு பெற்ற நில அளவையாளரின் திட்டவரைவின் துண்டு இலக்கம் 1 மற்றும் துண்டு இலக்கம் 9 ;*

*தெற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள காணிப்பகுதி;*

*மேற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள காணிப்பகுதி மற்றும் 1927 உத்தரவு பெற்ற நில அளவையாளரின் திட்டவரைவின் துண்டு இலக்கம் 8 A.*

*காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :*

1. *திருமதி பீ. எம். சந்திராவதி குமாரிஹாமி,*
   *இலக்கம் 7/3, 3 ஆவது ஒழுங்கை,*
   *நீர்கொழும்பு வீதி, குருநாகலை.*

2. *திருமதி சுவர்ணா கிரிந்த,*
   *இலக்கம் 7/3, 3 ஆவது ஒழுங்கை,*
   *நீர்கொழும்பு வீதி, குருநாகலை.*

2. துண்டு இலக்கம் 2 காணியின் பெயர் (இலக்கம் 1927 உடைய உத்தரவு பெற்ற நில அளவையாளரின் திட்டவரைவின் இலக்கம் 8 A இலிருந்து ஒரு பகுதி) காணி விஸ்தீரணம் 1 பேர்ச்சஸ் காணியின் எல்லைகள் :

வடக்கு : இலக்கம் 1927 உத்தரவு பெற்ற நில அளவையாளரின் திட்டவரைவின் துண்டு இலக்கம் 1 மற்றும் திருமதி குணவர்தன அவர்கள் உரிமை கோரும் காணி;

கிழக்கு : இலக்கம் 1927 உத்தரவு பெற்ற நில அளவையாளரின் திட்டவரைவின் துண்டு இலக்கம் 1 ;

தெற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள காணிப்பகுதி;

மேற்கு : திருமதி குணவர்தன அவர்கள் உரிமை கோரும் காணி.

காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :

1. திருமதி சுவர்ணா கிரிந்த,
இலக்கம் 7/3, 3 ஆவது ஒழுங்கை,
நீர்கொழும்பு வீதி, குருநாகலை.

9-357

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.